தினமணி

## ரூ.5.75 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனை

First Published : 05 Apr 2011 09:19:10 AM IST

கோபி, ஏப். 4: கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.5 லட்சத்து 75 ஆயிரத்துக்கு வாழைத்தார்கள் விற்பனையாகின.

கோபி-மொடச்சூர் சாலையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனிக்கிழமை வாழைத்தார் ஏல விற்பனை நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 7 ஆயிரம் வாழைத்தார்களை விவசாயிகள் கொண்டு வந்தனர்.

இதில், கதலி கிலோ ரூ.22.20-க்கும், நேந்திரன் ரூ.15.20-க்கும், செவ்வாழை தார் ரூ.440-க்கும், ரஸ்தாளி ரூ.270-க்கும், பச்சை நாடான் ரூ.185-க்கும், மொந்தன் ரூ. 190-க்கும், தேன்வாழை ரூ.320-க்கும், பூவன் ரூ.300-க்கும்,ரோபாஸ்டா ரூ.290-க்கும் விற்பனை செய்யப்பட்டன.

கோபி, பங்களாபுதூர், தூக்கநாயக்கன்பாளையம், அத்தாணி, கொளப்பலூர், நம்பியூர், குருமந்தூர், குன்னத்தூர், அளுக்குளி, கொங்கர்பாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை கொண்டு வந்தனர்.

திருப்பூர், தாராபுரம், காங்கயம், முத்தூர், பவானி, சேலம், ஈரோடு, கரூர், கொடுமுடி பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வந்திருந்தனர்.

தேங்காய் ஏலம்

இதேபோல், தேங்காய் ஏலத்துக்கு 10 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. அதிகபட்சமாக ஒரு தேங்காய் ரூ.10.20-க்கும், குறைந்தபட்சமாக ரூ.5.50- க்கும் விலை போனது. சராசரியாக ரூ.7.80-க்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் ரூ.85 ஆயிரம் மதிப்பிலான தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டன.

## புலிகள் பாதுகாப்புக் கருத்தரங்கு

First Published : 05 Apr 2011 09:24:11 AM IST

உதகை, ஏப். 4: நீலகிரி சுற்றுச்சூழல் மண்டலத்தில் புலிகளைப் பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கு உதகையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட வடக்கு வனக் கோட்டம் மற்றும் வன உயிரின அறக்கட்டளை சார்பில், உதகை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட பயிற்சி அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கு முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் ராஜீவ் ஸ்ரீவத்சவா தலைமை வகித்தார். அவர் பேசியது:

புலிகள் வாழும் பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலமே புலிகளைக் காப்பாற்ற முடியும். வெறுமனே வேலி போட்டு புலிகளைப் பாதுகாக்க முடியாது. புலிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு சமூகவேலியாக மாறினால்தான் புலிகளைக் காப்பாற்ற முடியும்.

முதுமலை புலிகள் காப்பகப் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தியதன் காரணமாகவே, புலிக் குட்டிகள் அருகில் உள்ள சீகூர் மற்றும் சத்தியமங்கலம் பகுதிகள் வரை தங்களது வாழ்விடத்தை விரிவுபடுத்தியுள்ளன.

புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதற்கு வனத் துறை மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளும், ஊடகங்களும் முக்கியக் காரணம் என்றார்.

மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் தீபக் ஸ்ரீவத்சவா, மாவட்ட வடக்கு வனக் கோட்ட அலுவலர் ராமசுப்ரமணியன், தெற்கு வனக் கோட்ட அலுவலர் அனுராக் மிஸ்ரா, டபிள்யு.டபிள்யு.எப். அமைப்பின் இயக்குநர் மோகன்ராஜ், நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கானுயிர் சங்கச் செயலர் ஜெயச்சந்திரன், வன உயிரின ஆய்வாளர்கள் டாக்டர் ராமகிருஷ்ணன், டாக்டர் டிக்சன், ரித்திகா, வனத் துறை கால்நடை மருத்துவர்கள் மனோகரன், கலைவாணன், உதவி வனப் பாதுகாவலர் நாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த கருத்தரங்கில் ஆய்வறிக்கை சமர்ப்பித்து, ஓசை அமைப்பின் தலைவர் காளிதாஸ் பேசுகையில், புலிகள் காப்பகங்களுக்கு வெளியில் உள்ள காப்புக் காடுகளுக்கு அதிக பாதுகாப்பு செலுத்துவதன் மூலமே, இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

வனத்துறை மட்டுமின்றி வன உயிரின ஆய்வாளர்கள், இயற்கை பாதுகாப்பு அமைப்புகள், மக்கள் ஆகியோரின் பங்களிப்பும் இருந்தால்தான் புலிகளைக் காப்பாற்ற முடியும். புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதற்கு காரணமான வனத் துறை அடிமட்ட ஊழியர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றார்.

நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கானுயிர் சங்கத்தின் முன்னாள் செயலர் ஏ.சி.சவுந்திரராஜனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. உதவி வனப் பாதுகாவலர் ஜெயராஜ் வரவேற்றார்.

வனச் சரகர் பிரேம்குமார் நன்றி கூறினார்.

இதில், 15-க்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் புலிகள் பாதுகாப்பு குறித்த ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

**சர்க்கரை ஆலை அமைக்க இந்தியர்களுக்கு எத்தியோப்பியா அழைப்பு**

ஏப்ரல் 05,2011,00:31



லக்னோ: சர்க்கரை ஆலை அமைக்க இந்திய வர்த்தகர்களுக்கு, எத்தியோப்பியா அழைப்பு விடுத்துள்ளது.ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியா, இந்திய சர்க்கரை துறையின், மகத்தான வளர்ச்சியை கண்டு வியப்பு தெரிவித்துள்ளது. இதையடுத்து, எத்தியோப்பியாவில், கரும்பு பயிரிடவும், சர்க்கரை ஆலைகள் அமைக்கவும் அந்நாட்டு அரசு, இந்திய தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.எத்தியோப்பியா சர்க்கரை கழகத்தின் இயக்குனர் ஜெனரல், அபய் திசாய், தலைமையிலான 5 நபர் குழு இந்தியா வந்துள்ளது. இக்குழுவினர், இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில்,முன்னணியில் உள்ள மாநிலங்களுக்கு சென்று, அங்குள்ள கரும்பு வயல்களையும், சர்க்கரை ஆலைகளையும், ஆராய்ச்சி நிலையங்களையும் பார்வையிட உள்ளனர். முதலில் உத்தர பிரதேசத்திற்கு சென்ற இக்குழுவினர், தேசிய சர்க்கரை மையம் மற்றும் லக்னோவில் உள்ள, கரும்பு ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை பார்வையிட்டனர்.
இம்மையங்களில், கரும்பு விளைச்சலை மேம்படுத்துவது, சர்க்கரை உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான வழிமுறைகளையும், ஆய்வு பணிகளையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.
இக்குழுவின் தலைவர் அபய் திசாய் கூறியதாவது:இந்திய சர்க்கரைத் துறை சிறப்பாக உள்ளது. சிறந்த அனுபவம், ஆய்வுகளின் காரணமாக இது சாத்தியமாகியுள்ளது. கரும்பு பயிரிடுவதிலிருந்து, சர்க்கரை உற்பத்தி வரை உண்டாகும் பல்வேறு பிரச்னைகளுக்கு இந்திய ஆராய்ச்சி மையங்கள்

தீர்வு கண்டுள்ளன. அதனால், இந்தியாவை பின்பற்றி, எத்தியோப்பியாவும், சர்க்கரை துறையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக, எத்தியோப்பியாவில், கரும்பு பயிரிடவும், சர்க்கரை ஆலைகள் தொடங்கவும் இந்திய தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும். கரும்பு விளைவதற்கான சிறந்த மண்வளமும், பருவ நிலையும் உள்ளதால் சர்க்கரை தொழில் லாபகரமாக இருக்கும். எத்தியோப்பியாவில் சர்க்கரை தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு, மலிவான விலையில் நிலம் மற்றும் சுலபத் தவணையில் கடனுதவி உள்ளிட்ட சலுகைகளை எத்தியோப்பிய அரசு வழங்கும். இவ்வாறு திசாய் கூறினார்.

**குறைந்தபட்ச விலை நிர்ணயத்தால் வெங்காயம் ஏற்றுமதி பாதிப்பு**

ஏப்ரல் 05,2011,00:25



புதுடில்லி இந்தியாவில், வெங்காயம் உற்பத்தி அதிகரித்ததை தொடர்ந்து, மத்திய அரசு அதன் ஏற்றுமதி மீதான தடையை நீக்கி உள்ளது. இத்துடன், வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையையும், மத்திய அரசு நிர்ணயித்தது. இதன்படி, பெங்களூரு ரோஸ் மற்றும் கிருஷ்ணாபுரம் வெங்காயம் நீங்கலாக, இதர வகை வெங்காயத்திற்கான, குறைந்தபட்ச ஆதரவு விலை, ஒரு டன்னுக்கு 600 ரூபாய் என கடந்த பிப்ரவரி மாதம் 17ம் தேதி அறிவிக்கப்பட்டது. இதனை மேலும் குறைக்க வேண்டும் என்று வெங்காய ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனை ஏற்ற, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவாரின் பரிந்துரைப்படி, மத்திய அரசு வெங்காயத்திற்கான குறைந்த பட்ச ஏற்றுமதி விலையை டன்னுக்கு 450 ரூபாய் என குறைத்து நிர்ணயம் செய்தது.

எனினும், சர்வதேச சந்தையில், பாகிஸ்தான் மற்றும் சீனாவிலிருந்து ஏற்றுமதியாகும் வெங்காயம், குறைந்த விலையில், கிடைப்பதால், இந்திய வெங்காய ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

இதனால், கடந்த பிப்ரவரி 17ம் தேதி முதல் மார்ச் 23ம் தேதி வரை இந்தியாவிலிருந்து 27 ஆயிரத்து 300 டன் வெங்காயம் மட்டுமே ஏற்றுமதியானது. இது, கடந்த ஆண்டின், இதே காலத்தில், 2 லட்சத்து 81 ஆயிரம் டன் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது. அதாவது, கடந்த ஆண்டு ஏற்றுமதியுடன் ஒப்பிடும் போது, இந்த ஒரு மாத காலத்தில் 10 சதவீத அளவிற்கு மட்டுமே வெங்காயம் ஏற்றுமதியாகி உள்ளது.

இதைத் தொடர்ந்து, வெங்காயம் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, டன்னுக்கு 350 ரூபாயாகவும், பின்னர் 275 ரூபாயாகவும் குறைத்தது. இந்நிலையில், மீண்டும் விலை குறைக்கப்பட்டு டன்னுக்கு 170 ரூபாய் என தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.இருப்பினும், இந்த குறைந்தபட்ச ஆதரவு விலையை, மேலும் குறைத்தால் மட்டுமே, வெங்காய ஏற்றுமதி லாபகரமாக இருக்கும் என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

**சப்போட்டா வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,01:58 IST

ஈரோடு: தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஈரோடுக்கு சப்போட்டா வரத்து அதிகரித்துள்ளது. மதுரை, மேலூர், ஒட்டன்சத்திரம், பொள்ளாச்சி, தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடப்பாண்டு சப்போட்டா விளைச்சல் இருமடங்காக அதிகரித்துள்ளது. இங்கிருந்து தமிழகத்தில் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. கோடை சீஸன் துவங்கியுள்ள நிலையில், சப்போட்டா வரத்து அதிகமாக உள்ளது. தினந்தோறும் ஈரோடு மார்க்கெட்டுக்கு ஆறு லாரிகளில் சப்போட்டா வந்து குவிகிறது. இங்கிருந்து சில்லரை வியாபாரிகள் விற்பனைக்கு வாங்கிச் செல்கின்றனர். வரத்து துவங்கியுள்ள நிலையில் சப்போட்டா கிலோ 20 ரூபாயில் இருந்து 10 ரூபாயாக குறைந்துள்ளது.

**கோடை துவக்கம் மைசூரு பப்பாளிக்கு மவுசு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,01:58 IST

ஈரோடு: கோடை சீஸன் துவங்கி வெயில் சுட்டெரிக்கும் நிலையில், ஈரோட்டில் மைசூரு பப்பாளி நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. பப்பாளியில் காய் முதல் பழங்கள் வரை நல்ல வருவாய் கிடைப்பதால், விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். சென்றாண்டை காட்டிலும்,

நடப்பாண்டு விளைச்சல் இரு மடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக, தமிழக பப்பாளியை விட மைசூரு பப்பாளிக்குதான் பழ பிரியர்களிடையே மவுசு கூடியுள்ளது. தமிழகத்தில் பப்பாளி மரத்தில் பழம் விளைச்சலாவதற்கு முன்னதாகவே, காய் தருவாயில் அதிலுள்ள பால்களை எடுத்து விற்பனை செய்கின்றனர். இதனால், இப்பழங்களில் சுவையும் குறைவாகவே இருக்கிறது. ஆனால், கர்நாடகா மாநிலம் மைசூரில் விளையும் பப்பாளி பழங்களில் பால் எடுப்பதில்லை, இதனால், சுவை கூடுதலாக கிடைக்கிறது.

கோடை வெயில் அதிகரிப்பது போல, பழங்கள் விற்பனையும் அதிகரித்துள்ளது. முலாம்பழம், தர்பூசணி, வெள்ளரி, பப்பாளி, சப்போட்டா வரத்து அதிகரித்துள்ளது. திராட்சை, ஆப்பிள், பலா வரத்து குறைந்துள்ளது. பப்பாளியில் மருத்துவ குணங்கள் அதிகமாக அடங்கியுள்ளதால், பழ பிரியர்கள் அதிகமாக வாங்கிச் செல்கின்றனர். ஈரோடு மார்க்கெட்டில் தமிழக பப்பாளி கிலோ 10 ரூபாய், மைசூரு பப்பாளி கிலோ 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

**காய்கறி விலை சரிவு; விவசாயிகள் சோர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,00:02 IST

வெள்ளகோவில் : வரத்து அதிகரித்ததையடுத்து, வெள்ளகோவில் வாரச்சந்தையில் காய்கறி விலை குறைந்துள்ளது. தக்காளி, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் விலை, கடந்த இரு வாரங்களாக ஏற்ற இறக்கம் இன்றி சீராக உள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வாரச்சந்தையில், தக்காளி கிலோ ரூ.5; பீட்ரூட் 12; பச்சை மிளகாய் 12; முட்டைகோஸ் 10; கத்தரிக்காய் 15; முள்ளங்கி 10; சின்ன வெங்காயம் 10; பெரிய வெங்காயம் 10; புடலை 10; காரட் 20; பீன்ஸ் 20 ரூபாய் என விற்கப்பட்டது. மூலனூர், புதுப்பை பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாரச்சந்தைக்கு மூட்டை மூட்டையாக முருங்கைகாய் கொண்டு வந்தனர்.

மற்ற காய்களைவிட, முருங் கைகாய் வரத்து அதிகரித்திருந்தது. கரூர், திருச்சி, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் முருங்கைகாய் மொத்தமாக கொள்முதல் செய்தனர். சில்லரையில் முருங்கைகாய் ரூ.1க்கு விற்கப்பட்டது. விவசாயிகள் கூறியதாவது: கடந்த வாரங்களைவிட, வெளியூர்களில் இருந்து தக்காளி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட காய்கறி வரத்து திகரித்துள்ளது. இதனால், காய்கறி விலை குறைந்து, கடந்த வாரம் முதல் ஏற்ற இறக்கம் இன்றி சீராக இருக்கிறது.

காய்கறிக்கு தட்டுப்பாடு ஏற்படும்போதே, வியாபாரிகள் எங்களிடம் இருந்து குறைவான விலைக்கே கொள்முதல் செய்வர். வரத்து அதிகரித்துள்ள நிலையில், அடிமாட்டு விலைக்கு

காய்கறிகளுக்கு விலை கொடுக்கின்றனர். இதனால், சாகுபடிக்கான செலவுகூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது, என்றனர்.

**சில்லரை விற்பனைக்கு ஆவின் பால் பற்றாக்குறை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2011,01:01 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் சில்லரை விற்பனைக்கு ஆவின் பால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பால் பூத் வியாபாரிகள் புலம்பி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள 726 பால் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் நாளொன்றுக்கு 2.10 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஏப்ரல், மே மாதம் கோடை காலம் என்பதால் பால் உற்பத்தி வெகுவாக குறைவது இயற்கை.

நடப்பாண்டில் பால் உற்பத்தி குறைந்துள்ளதால், சில்லரை விற்பனைக்கு பால் பற்றாக்குறையாக உள்ளது. பூத் விற்பனையாளர் ஒருவர் கூறுகையில், "வெயில் காலம் துவங்கி விட்டாலே பால் வரத்து குறைந்து விடும். எங்கள் கடையில் நாளொன்றுக்கு 600 லிட்டர் வரை சில்லரை பால் விற்பனை நடக்கும். தற்போது ஆவின் பால் அனைத்தும் சென்னையை நோக்கி அதிகளவில் செல்வதால் இரு நேரமும் 300 லிட்டர் மட்டுமே பால் வரத்தாகிறது.

உள்ளூர் விற்பனைக்கு பால் பற்றாக்குறையாக உள்ளது" என்றார். சித்தோடு ஆவின் நிறுவன பொது மேலாளர் ராஜராஜன் கூறுகையில், ""ஈரோடு மாவட்டத்தில் பால் சில்லரை விற்பனைக்காக நாளொன்றுக்கு 72 ஆயிரம் லிட்டர் அனுப்பி வருகிறோம். நமது மாவட்ட விவசாயிகளிடம் இருந்து 1.92 லட்சம் லிட்டர் கொள்முதல் செய்கிறோம். ஈரோட்டில் இருந்து சென்னைக்கு நாளொன்றுக்கு 1.20 லட்சம் லிட்டர் பால் விற்பனைக்காக அனுப்பி வருகிறோம்," என்றார்.

**இரும்பாலையில் திடீர் மழை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2011,01:22 IST

சேலம்: இரும்பாலை பகுதியில் நேற்று இரவு திடீரென மழை பெய்ததால், அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சேலம் மாவட்டத்தில் சில நாட்களாக பகல் நேரங்களில் கடுமையான வெயில் அடித்து வருகிறது. இரவு நேரத்தில் காற்றின் அளவு குறைந்துள்ளதால், புழுக்கத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சேலம் மாநகர பகுதியில் நேற்று மாலை கருமேகம்

சூழ்ந்ததால், மழை வரும் என, அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், மழை வரவில்லை. இந்நிலையில், இரும்பாலை, தாரமங்கலம் மற்றும் ஓமலூர் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று இரவு லேசான மழை பெய்தது. இம்மழை 15 நிமிடங்கள் வரையே நீடித்தது. சிறிது நேரமே பெய்தாலும், கோடை வெயிலுக்கு இடையே மழை பெய்ததால், குளிர்ந்த காற்று வீசியது. அதனால், இப்பகுதி மக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**வனப்பகுதியில் இலவம் பஞ்சு கொட்டை முந்திரி எடுக்க தடை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2011,22:51 IST

வருஷநாடு : வனப்பகுதிகளில் இருந்து இலவம் பஞ்சு, கொட்டை முந்திரிகளை எடுத்துச்செல்ல வனத்துறை தடைவிதித்துள்ளது. கடமலை-மயிலை ஒன்றியம், மேகமலை ஊராட்சிக்குட்பட்ட பொம்முராஜபுரம், இந்திராநகர், அரசரடி, நொச்சிஓடை, மண்ணூத்து, ராஜிவ்நகர் ஆகிய கிராமங்கள் மேகமலை வனச்சரகம் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது இந்த பகுதிகளில் விளையக்கூடிய இலவ பஞ்சு,கொட்டை முந்திரிகளை விற்பனைக்கு வெளியே கொண்டு செல்ல வனத்துறை அனுமதி மறுத்து விட்டதால், விவசாயிகள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: மேகமலை வனப்பகுதிகளை அரசு வனச் சரணாலயமாக மாற்றப்பட்டதால் வனத்துறைக்கு சொந்தமான நிலங்களில் இருந்து விளை பொருட்களை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டது. பட்டா நிலங்களில் விளையக்கூடிய பொருட்களை கொண்டு செல்ல தடையில்லை. மேலும் வனத்தினை பாதுகாக்க பொதுமக்கள் வனத்துறை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும், என்றனர்.

**உணவு உரிமை உயிரின் பரிசு!**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 04 Apr 2011 01:29:20 AM IST

இந்தியத் திருநாட்டின் உணவுக்கொள்கையில் மக்களின் உயிர்கள் இரண்டுவிதமாகப் பறிபோகின்றன. ஒருபக்கம் உணவை உற்பத்தி செய்பவன் கடனாளியாகிக் கந்துவட்டிக்குப் பலியாகித் தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்கிறான். மற்றொரு பக்கத்தில் உணவு வாங்கப் பணமில்லாமல் பரம ஏழைகள் பட்டினியால் சாகின்றனர்.

உணவு உற்பத்தியாகும் இடங்களில் அரசுக் கொள்முதல் காரணமாக உணவை மலையெனக் குவித்துள்ளனர். யாருக்கு எங்கு தேவையோ அங்கு உணவு செல்வதில்லை. சத்தீஸ்கர், தமிழ்நாடு நீங்கலாக பொது விநியோகத்தில் உணவுத்தேங்கல் ஏற்பட்டுள்ளது.

எல்லா கிராமங்களிலும் ரேஷன் கடைகள் இல்லை. நகரப்பகுதிகளில் மட்டும் நிறைய உண்டு. மாத ரேஷன் வாங்க சில மாநிலங்களில் 10 முதல் 20 கி.மீ. வரை நடை பயில வேண்டும்.

ஒரேசமயத்தில் 20 கிலோ அல்லது 35 கிலோ அரிசியோ, கோதுமையோ வாங்கப் போதிய பணம் இல்லாததாலும் ரேஷன் கடைகளில் ஆஃப்டேக் அதாவது சரக்குகள் தீருவது இல்லையாம்.

தமிழ்நாட்டிலும் சத்தீஸ்கரிலும் ஒரு ரூபாய் அரிசித் திட்டம் உள்ளது. இதர மாநிலங்களில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள நியாயவிலையில்தான் ரேஷன் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்ற கூட்டுறவு விற்பனைச் சங்கம் பிரிட்டிஷ் ஆட்சியில் தொடங்கி நல்ல அடித்தளம் பெற்றிருந்தாலும் நடுவே நலிவுற்று நோயுற்றபோது ரேஷன் பொருள் விநியோகப் பொறுப்பைப் பெற்றுப் புத்துணர்வு கொண்டது.

தமிழ்நாட்டில் சுமார் 93% ரேஷன் பொருள்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமான கடைகள் மூலம் விநியோகமாகின்றன. மீதி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் மூலமும் விநியோகமாகின்றன.

தமிழ்நாட்டில் அனைத்துக் கிராமங்களிலும் ரேஷன் கடை உண்டு. அதிகபட்சம் 2 கி.மீ. தூரமே. அரிசி அரசியலால் ஆட்சியைக் கோட்டைவிட்ட காங்கிரஸ் ஆட்சிக்குப்பின், ஒரு ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி வழங்குவதாக வாக்களித்த அறிஞர் அண்ணா வாக்குறுதியை ஏற்று தி.மு.க. பதவிக்கு வந்த காலம் முதலே அரிசி விஷயத்தில் உஷார்.

தி.மு.க. என்றாலும் அ.தி.மு.க. என்றாலும் போட்டி போட்டுக் கொண்டு ரேஷன் கடை நியாயவிலையைவிடக் குறைவாகக் குறைத்துக் குறைத்து இன்று கிலோ ஒரு ரூபாயானது.

அடுத்தகட்டமாக, இன்று 2011 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அரிசி இலவசமாகிவிட்டது. மாநில அரசுக்கு இதனால் ஏற்படும் இழப்பு 4,000 கோடி ரூபாய். இந்த இழப்பை ஈடுசெய்யவே டாஸ்மாக் அதாவது ""தேசிய உடைமையாக்கப்பட்ட மதுக்கடை வியாபாரம்" கைகொடுப்பது மட்டுமல்ல; டி.வி. பெட்டிகளையும் மாநில அரசால் வழங்க முடிந்தது.

கேபிள் கட்டண வசூலையும் பெருக்கிக் கொள்ள முடிந்தது. எப்படியெனில் டாஸ்மாக் மூலம் கணக்கில் வந்த நிகர லாபம் 12,000 கோடி ரூபாய்கள். கிலோ 1 ரூபாய்க்கு அரிசியுடன் டி.வி. யுடன் பல இலவசங்களை அள்ளிவிட்டுப் பெருமையுற்றாலும்கூட, மதுவிலக்கால் உயர்ந்த மகாத்மாகாந்தியின் "ஆன்மா இதை மன்னிக்குமா? ஏழை மக்களைக் குடிக்க வைத்துக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இலவசங்களை வழங்குவது அரசியல் தருமம் ஆகாது.

ரசாயன உரத்தால் விஷமான உணவுடன் உடலை விஷமாக்கும் டாஸ்மாக் சாராயமும் சேர்ந்து வயிற்றை நிரப்பும்போது ஈரல் நோய், இதய நோய், வயிற்றுப்புண், கட்டி, புற்றுநோய், வாத

நோய், பித்த நோய் என்று தமிழர்களை நோயாளிகளாக மாற்றுவதுதான் உணவு உரிமைச்சட்டம் என்று ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டால் அந்த விதியை யார் மாற்ற முடியும்? ஆகவே, இதர மாநிலங்களுக்கு சத்தீஸ்கர் முன்மாதிரியே நன்று.

பழங்குடிகள் நிரம்பிய மாநிலம் சத்தீஸ்கர். மாவோயிஸ்டுகளின் கூடாரமும்கூட. உணவு விநியோகம் ஊழல் நிரம்பியிருந்தது. அரிசி உற்பத்தியில் உபரி மாநிலம். 1967-ல் தமிழ்நாட்டில் சி.என். அண்ணாதுரை செய்ததை பாரதிய ஜனதா தலைவர் ராமண் சிங் செய்தார். மக்களுக்கு ஊழலற்ற உணவு விநியோகத்தையும் மலிவு விலையில் அரிசியும் தர வாக்களித்தபடி 2004-ல் இவர் பதவிக்கு வந்தார். வந்தபின்னர் பொதுவிநியோக அவசரச்சட்டம் ஒன்றைப் பிறப்பித்துத் தனியார் ரேஷன் கடைகளையும், போலி ரேஷன் கடைகளையும் ஒழித்தார்.

ரேஷன் கடைகளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பஞ்சாயத்து சபை, மகளிர் சுயஉதவிக் குழு அமைப்புகளுக்கு வழங்கினார். ரேஷன் கடை அமைக்க வங்கிக்கடன் மானியங்கள் வழங்கப்பட்டன. ஏறத்தாழ 10,000 ரேஷன் கடைகளும் 1,500 கொள்முதல் நிலையங்களும் உருப்பெற்றன.

சத்தீஸ்கர் உணவு விநியோகத்தின் சிறப்பு எதுவெனில் அலோக் சுக்லாவின் ஆக்கப்பூர்வமான யோசனைகளுக்கு ராமண்சிங் வழங்கிய நல்லாதரவு. 2007-08-ல் உணவுச் செயலராகப் பணியாற்றிய சுக்லா ஐ.ஏ.எஸ். தலைசிறந்த பொது நிர்வாகி என்ற பிரதமர் விருதைப் பெற்றார். இவர் வழங்கியுள்ள உணவு நிர்வாகத்தில் ஒரு மூட்டை அரிசிகூட வீணாகாத திட்டத்தை அமல் செய்தார். ஆண்டுக்கு 44 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து அதில் 24 லட்சம் டன்கள் மையத் தொகுப்புக்கு வழங்கியதுபோக, நீண்டகாலம் நெல்லாக வைக்காமல் கொள்முதல் செய்த 4 மாதங்களுக்குள் அரவை செய்து பக்குவம் செய்து ரேஷன் கடைகளுக்கு வழங்கப்படுவதுடன் - திருட்டுப்போகவோ, ஏமாற்றவோ, வெளி அங்காடிக்குக் கடத்தவோ வழியில்லாமல் கம்ப்யூட்டர் கண்காணிப்பும் உண்டு. திருட்டைக் கம்ப்யூட்டர் காட்டிக் கொடுத்துவிடுமாம்!

டாஸ்மாக் விற்பனையில்லாமல் நல்வழியில் மாநில மானியம் 1,287 கோடி ரூபாயுடன் மத்திய அரசு மானியம் 2,000 கோடி ரூபாய் கொண்டு உணவு விநியோகம் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் சுமார் 50 சதவீத மக்களுக்கு வழங்கி, மாவோயிஸ்டுக் கிளர்ச்சிகளையும் அந்த மாநில அரசு சமாளித்துவிட்டது.

உலகத்தில் வறுமையின் காரணமாக யாரையும் பட்டினியால் சாகவிடக்கூடாது என்றும், குறைந்தபட்சம் 1,700 கலோரி உணவாவது கிடைக்க வேண்டும் என்றும் ஐ.நா. உணவு - விவசாய நிறுவனம் வழங்கியுள்ள உத்தரவைத் தொடர்ந்து வளரும் நாடுகள் எல்லாம் ஏழைகளின் உணவு உரிமை மசோதாவை அதாவது "ஃபுட் செக்யூரிட்டி மசோதா'வைச் சட்டமாக்கி வருகின்றன.

குறிப்பாக, பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளில் கொடிய வறுமை நிலவி வருகிறது. ஐ.நா. உணவு நிதியும் கணிசமாக வழங்கப்படுகின்றன.

இந்தியாவில் வறுமைக்கோட்டை அளவிடுவதில் நிறைய முரண்பாடுகள் இருப்பினும், தமிழ்நாடு, சத்தீஸ்கர் மாநிலங்களில் பொது விநியோகத்தில் தாராள மனப்பான்மை உள்ளது. வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கும் அரிசி உண்டு.

டெண்டுல்கர் கமிட்டி ஐ.நா. உணவு - விவசாய நிறுவன அளவுகோலை மையமாக வைத்து கிராமப்பகுதிகளில் 41 சதவீத மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வதாக முடிவு செய்துள்ளது. ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் என்.சி. சக்சேனாவின் முடிவு 50% ஆகும். திட்டக்கமிஷன் சர்வேயின்படி இது 28.3%.

ஏழ்மை பற்றிய புள்ளிவிவரம் பொதுவாகவே மிகைப்படுத்தப்பட்டுப் பேசுவதாகவும் கருத்து உண்டு. அரசிடமிருந்து எதுவும் உதவி கிட்டும் என்று மக்கள் பொதுவாக வருமானத்தைக் குறைத்துக் கூறலாம். என்னவாயினும் சரி, வறுமையில் உழன்று வாங்கும் சக்தி இல்லாத இம்மக்கள் பட்டினியில் மடிந்துவிடக் கூடாது என்றுதான் இந்திய நாடாளுமன்றத்தில் ஏழை உயிர்களுக்குப் பரிசாக உணவு உரிமை மசோதா சட்டமாக்கப்படவுள்ள சூழ்நிலையில், பொது விநியோகத்தை எட்ட முடியாத இடத்தில் உள்ளவர்களுக்கு எப்படி உணவுதானியம் கிடைக்கச் செய்வது என்றுதான் யோசிக்க வேண்டும்.

மாறாக, 2011 பட்ஜெட்டில் உணவு மானியத்தைப் பணமாக வழங்கப் போவதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளதைக் கவனித்தால் உணவு விநியோகத்தை, அதாவது ஏழைகளுக்கு ரேஷனில் அரிசி, கோதுமை வழங்கும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் முயற்சியாகவே தோன்றுகிறது. குடும்பத்தலைவரிடம் வழங்கப்படும் பணத்தை அவர் உணவை வாங்கச் செலவழிப்பாரா? "குவார்ட்டர்' வாங்கச் செலவழிப்பாரா?

தவிரவும் உண்மையான ஏழையை அடையாளப்படுத்துவதிலும் சிக்கல் உண்டு. ஏழைகளைச் சென்றடைய வேண்டிய பணம் நடுவில் இடைத்தரகர்களைச் சென்றடையலாம்.

இப்பொழுதும்கூட வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் ஏழைகளின் அடையாள அட்டைகளை வழங்குவதில் முறைகேடுகள் உண்டு. அதற்கும் ஏழைகள் லஞ்சம் கொடுத்துப் பெறவேண்டிய சூழ்நிலை தமிழ்நாட்டில் மட்டுமல்ல; எல்லா மாநிலங்களிலும் உள்ளது.

உணவைக் கொள்முதல் செய்வதிலிருந்து பின்னர் பக்குவப்படுத்தி அது நுகர்வோரிடம் சென்றடையும்வரை பல கட்டங்களில் பலவிதமான ஊழல்கள் உண்டு. இந்த ஊழல் கூட்டணியில் உணவுக் கார்ப்பரேஷன், மாநில சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், ரேஷன் கடைகள் இணைந்து அந்த நாள் முதல் இந்த நாள் வரை சாதித்தவை 2ஜி ஸ்பெக்ட்ரம்போல் ஒன்றுக்குப்பின் பல பூஜ்ஜியங்கள் போட்ட பல கோடி ஊழல்கள் என்று அண்மையில் ஷேட்காரி சங்கடன் விவசாயிகள் சங்கத் தலைவரும் எம்.பி.யுமான சரத் ஜோஷி அப்பட்டமாகக் கூறுகிறார்.

ஒருபக்கம் மலைபோல் உணவுக்குவியல். மற்றொருபக்கம், வாங்கும் சக்தியற்று ஆதிவாசிகளாகவும், பழங்குடிகளாகவும் வாழ்ந்துவரும் தரித்திர நாராயணர்களின் பட்டினிச்சாவுகள்.

உணவுக் கொள்முதலில் பிரச்னைகள் இல்லை. கொள்முதல் செய்த உணவு நிஜமான ஏழைகளை அடையாததுதான் விசுவரூபம் எடுத்து வருகிறது. இதில் தமிழ்நாடும் சத்தீஸ்கரும் விதிவிலக்கு. வாங்கும் சக்தியற்ற பல கோடி கடைக்கோடி மக்களைப் பட்டினியால் வாடிச் செத்துவிடாமல் பாதுகாக்கும் நல்லெண்ணத்தில் உணவு பெறும் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டு உயிரின் பரிசாக அன்னமிடுவதைப்போல் நல்ல புண்ணியம் வேறு ஏதும் உண்டோ?

**விலையை குறைக்கும் வியாபாரிகள் பாதிப்பில் மிளகாய் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2011,22:49 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : பதுக்கலுக்காக வியாபாரிகள் தங்களுக்குள்ளாக பேசி, விலை குறைப்பில் ஈடுபடுவதால் மிளகாய் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூரில் அப்பயநாயக்கர்பட்டி, பாப்பநாயக்கர்பட்டி, தொம்பன்குளம், கொங்கன்குளம், கோபாலன்பட்டி, குன்னூர் உட்பட பகுதிகளில் விவசாயிகள் மிளகாய் பறிக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்பட உள்ளன. கடந்த ஜனவரி வரை குவிண்டாலுக்கு 10,500 ரூபாய் வரை விற்பனையான மிளகாய், தற்போது 6,500 ரூபாய்க்கும் குறைவாக வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இது குறித்து தேசிய வேளாண் விழிப்புணர்வு இயக்க மாவட்ட தலைவர் நாகராஜன் கூறியதாவது: ஆந்திரா, கர்நாடக உட்பட பல மாநிலங்களில், இயற்கை சீற்றத்தால் மிளகாய் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக மிளகாய்க்கு நல்ல விலை கிடைத்து வந்தது. தற்போது இங்கு விளைச்சல் அதிகரித்தால் இதை பதுக்கி வைப்பதற்காக, தங்களுக்குள் பேசி விலையை கடுமையாக குறைத்துள்ளனர். அரசே, மிளகாயை கொள்முதல் செய்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டும், என்றார்.

**ஏலம் ஒத்தி வைத்ததால் மஞ்சள் மூட்டைகள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2011,01:22 IST

ஆத்தூர்:ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள், பருத்தி ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது. அதனால், விற்பனைக்கு கொண்டு வந்த மஞ்சள் மற்றும் பருத்தி மூட்டைகளை விவசாயிகள், குடோனில் அடுக்கி வைத்துவிட்டுச் சென்றனர்.ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனிக்கிழமை மஞ்சள் ஏலமும்,

ஞாயிற்று கிழமை பருத்தி ஏலம் நடந்து வருகிறது. ஏலத்துக்கு ஆத்தூர், தம்மம்பட்டி, தலைவாசல், கெங்கவல்லி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மார்ச் மாதம் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால், 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனையானது.

பின், கடந்த 19ம் தேதி நடக்க இருந்த மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது. கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால், 11 ஆயிரத்துக்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் ஒன்பது ஆயிரத்துக்கும் விற்றது. திடீரென மஞ்சள் விலை குறைவால், பெரும்பாலான விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்யாமல் குடோனில் இருப்பு வைத்து சென்றனர். நேற்று முன்தினம் வழக்கம் போல், மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆனால் ஈரோட்டில் பெரிய, சின்ன மாரியம்மன் கோவில் விழா நடப்பதால், வியாபாரிகள் மஞ்சள் ஏலத்தில் கலந்து கொள்ள வரவில்லை.

அதனால், நேற்று முன்தினம் சனிக்கிழமை நடக்க இருந்த மஞ்சள் ஏலம் திடீரென ஒத்தி வைக்கப்பட்டது. அதனால் விற்பனைக்கு கொண்டு வந்த, 100க்கும் மேற்பட்ட மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள் குடோனில் அடுக்கி வைத்துச் சென்றனர். அதேபோல், நேற்று நடக்க இருந்த பருத்தி ஏலமும் ஒத்தி வைக்கப்பட்டது. விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 500க்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகளை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் அடுக்கி வைத்து சென்றனர்.

**நவரை சாகுபடிக்கு தண்ணீர் தட்டுப்பாடு அதிகாரிகள் மீது விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,23:49 IST

கிள்ளை : சிதம்பரம் அருகே நவரை சாகுடிக்கு ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் மீது விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். சிதம்பரம் கிழக்குப் பகுதியில் கடற்கரையோரம் உள்ள கிராமத்தில் நவரை சாகுபடிக்கு நடவு செய்துள்ள நிலங்களில் தற்போது நெற்பயிர்கள் கதிர் வைத்து செழுமையாக உள்ள நிலையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப் பாட்டால் நெற்பயிர் காய்ந்து வருகிறது. தற்போது நாகை மாவட்டத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள தண்ணீரை குறைந்த அளவிற்கு திறந்து விட்டால் சிதம்பரம் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாடு நீங்கி விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

ஆனால் சுய நலத்திற்கு செயல்படும் சில விவசாய சங்கத்தினர்களின் பேச்சைக் கேட்டு பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஒரு தலைபட்சமாக நடந்து கொள்வதுடன், தண்ணீர் திறக்க மறுப்பதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும், தண்ணீர் குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் முறையிட்டால், நாங்கள் சொல்லாமல் ஏன் நவரை சாகுபடி செய்தீர்கள் என கேட்கின்றனர் என விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

**நீராவி மூலம் மஞ்சளை வேக வைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,01:55 IST

ஈரோடு: கூலியாட்கள் பற்றாக்குறையை சமாளிக்க வெள்ளோட்டம்பரப்பு பகுதியில் நீராவி மூலம் மஞ்சள் வேக வைக்கும் பணி நடக்கிறது. ஏழு நிமிடத்தில் நான்கு டிரம் மஞ்சள் வேக வைக்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, எட்டாம் நம்பர், 10 நம்பர் உள்ளிட்ட ரக மஞ்சள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. புது மஞ்சள் வரத்து காரணமாக மஞ்சள் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. குவிண்டால் 10 ஆயிரத்து 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது. காலிங்கராயன் பாசனத்தில் கொடிமுடி யூனியனில் உள்ள கொளாநல்லி, கருமாண்டம்பாளையம், வெள்ளோட்டம்பரப்பு, நஞ்சை கொளாநல்லி, ஊஞ்சலூர், ஆராம்பாளையம் ஆகிய பகுதிகளில் மைசூர் சம்பா, சேலம், 10 நம்பர் ஆகியவை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் 2,000 ஏக்கர் வரை மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. கொடிமுடி சுற்று வட்டாரத்தில் எங்கு பார்த்தாலும் மஞ்சள் அறுடை பணி தீவிரமாக நடக்கிறது. சென்ற காலங்களில் அறுவடை செய்யப்படும் மஞ்சள் கொப்பரை மூலம் வேக வைக்க வைத்து காய வைக்கப்படும். விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால், எந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். நெல் நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், தேங்காய் தள்ளும் இயந்திரம் என பல்வேறு எந்திரங்கள் விவசாயத்தில் வந்து விட்டன. இதுபோல், நீராவி மூலம் மஞ்சள் வேக வைக்கும் பணி நடக்கிறது.

மஞ்சள் வேக வைக்க ஒரு பாய்லர், ஐந்து டிரம்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒரு இரும்பு குழாய் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. பாய்லரில் நெருப்பு மூட்டப்படுகிறது. ஒரு டிரம்மில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கு டிரம்மில் மஞ்சள் கொட்டப்பட்டுள்ளது. தண்ணீர் வைக்கப்பட்டுள்ள டிரம் கொதித்து, அதில் இருந்து வெளியேறும் நீராவி மற்ற நான்கு டிரம்களுக்கு செல்கிறது. நீராவி மூலம் ஏழு நிமிடத்தில் மஞ்சள் வெந்து விடுகிறது.

கொடுமுடி விவசாயி ராமலிங்கம் கூறியதாவது: வழக்கமாக கொப்பரை மூலம் மஞ்சள் வேக வைத்தால், இரண்டு கொப்பரை வேக வைக்க அரை மணி நேரமாகும். நீராவி மூலம் மஞ்சள் வேக வைத்தால் ஏழு நிமிடத்தில் வெந்து விடும். ஒரு முறை மஞ்சள் வேக வைத்தால் 50 ரூபாய் கூலி தருகிறோம். காய வைப்பதற்கே கிட்டத்தட்ட ஒரு வாரமாகி விடும். மேலும் காய வைத்த மஞ்சள் எந்திரம் மூலம் பாலிஸ் செய்து, பின் மூடைகளாக தைத்து விற்பனைக்கு கொண்டு வரப்படும். மார்க்கெட்டுக்கு வர இரண்டு முதல் மூன்று வாரமாகி விடுகிறது. மஞ்சள் விலை உயர்வு காரணமாக அதிகளவில் மஞ்சள் பயிரிட்டோம். மஞ்சள் விலை திடீரென குறைந்தது அதிர்ச்சியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மல்லிகை விலை 5 மடங்கு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,02:26 IST

மதுரை:மதுரையில் கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகை 60 ரூபாய்க்கு விற்ற நிலையில், நேற்று 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது.கடந்த மாதம் முகூர்த்த நாட்கள் அடுத்தடுத்து வந்த போதிலும், மல்லிகை வரத்து அதிகம் இருந்ததால், விலை கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த வாரம் வரை கிலோ 60 ரூபாய் என்ற நிலையில்தான்
மல்லிகை விற்கப்பட்டது. இந்நிலையில் மார்ச் 25,26ல் பெய்த தொடர் மழையால் உற்பத்தி குறைந்தது. தற்போது முகூர்த்த நாட்கள் இல்லாதபோதும், மல்லிகை விலை 6 மடங்காக அதிகரித்து, நேற்று 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இது வியாபாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் சங்க நிர்வாகி சோ.ராமச்சந்திரன் கூறுகையில், ""இரண்டு நாள் மழையால், தற்போது மல்லிகை உற்பத்தி பாதிக்கப்பட்டு இந்த விலையில் விற்கப்படுகிறது. தொடர்ந்து விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது," என்றார்.

**கொடைக்கானலில் கருகும் பூச்செடிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,01:37 IST

கொடைக்கானல், : கொடைக்கானலில் பகலில் நிலவும் சுட்டெரிக்கும் வெயிலால் குடிநீர் ஆதாரங்கள் வற்றி வருகின்றன. மலர்கண்காட்சிக்காக நடவு செய்யப்பட்ட செடிகளும் போதிய வளர்ச்சியில்லாமல் பூக்காமல் உள்ளது. கொடைக்கானலில் இம்மாதத்தில் சராசரியாக 16 முதல் 20 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும். கடந்த சில ஆண்டுகளாக மாறிவரும் பருவநிலையால் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது.

வனப்பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்கள், தடுப்பு அணைகள் வறண்டு வருகிறது. நகர்பகுதியில் முன்பு நான்கு நாட்களுக்கு ஒரு முறை இருந்த குடிநீர் சப்ளை, 6 நாட்களுக்கு ஒரு முறை என மாற்றப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக ஏரியருகே உள்ள பிரையண்ட் பூங்காவிலும் தாக்கம் அதிகமாக உள்ளது. கோடை மலர்கண்காட்சிக்காக நடவு செய்யப்பட்ட 2 லட்ச நாற்றுக்களும் வளர்ச்சியில்லாமல் பூக்காமல் அப்படியே உள்ளது. வாரவிடுமுறை நாட்களுக்கு சுற்றுலா வரும் பயணிகளும் ஏமாற்றத்துடனே திரும்புகின்றனர். கோடைவிழா துவங்க சில வாரங்களே உள்ள நிலையில் செடிகளை தேற்றும் முயற்சியில் தோட்டக்கலைத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

**தோட்டக்கலை பண்ணையில் மிளகு செடி விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,01:43 IST

நாமக்கல்: "மிளகு செடிகள் தேவைப்படுவோர் கொல்லிமலையில் உள்ள செம்மேடு, படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளை அணுகலாம்' என, தோட்டக்கலை துணை இயக்குனர் தனகோபாலன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: வாசனைப் பயிர் அரசன் என்றழைக்கப்படும் மிளகு, கொடிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, மிளகு உற்பத்தியில் தமிழகம் 3வது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் கன்னியாகுமரி, நீலகரி, சேலம், திண்டுக்கல், நாமக்கல் மாவட்டத்தில் மிளகு உற்பத்தி செய்யப்படுகிறது.

மிளகு கொடி, சில்வர்ஓக் மரங்களில் ஏற்றிவிடப்பட்டு சாகுபடி செய்யப்படுகிறது. மிளகு குத்துச்செடி சாகுபடி எனப்படும் ஒரு புதிய வழிமுறை வழியாக மிளகு வீட்டுத் தோட்டங்களில் தொட்டிகளில், சிறு செடிகளாக வளர்க்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. மிளகு குத்துச்செடி நாற்றுகள் உற்பத்தி செயவதற்கு நன்கு வளர்ந்த, சிறந்த உற்பத்தி திறன் உடைய மிளகு கொடிகளில் காய்க்கும் கிளைகள் தெரிவு செய்யப்பட்டு, அத்தகைய கொடிகளில் இருந்து குத்துச்செடி நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மிளகு குத்துச்செடி உற்பத்தி செய்வதற்கு பன்னியூர் 1, கரிமுன்டா மற்றும் கொட்டநாடன் போன்ற ரகங்கள் சிறந்தவைகளாக காணப்படுகின்றன.

குத்துச்செடி நாற்றுகள் உற்பத்தி செய்வதற்கு, தெரிவு செய்யப்பட்ட காய்க்கும் கிளைகளின் நுனி இலைகள் தவிர பிற இலைகள் நீக்கப்பட்டு, கிளையின் நுனி, 9.2 சதவீதம் காப்பர் ஆக்ஸிகுளோரைடில் 20 முதல் 30 நிமிடங்கள் நனைக்கப்பட்ட மண் பைகளில் நடவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. வேர்கள் நன்கு வளர, 100 பி.பி.எம்., இன்டோல் பியூட்ரிக்

அமிலத்தில், 45 நொடிகள் கிளையின் அடிப்பகுதி நனைக்கப்பட்டு நடவு செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் குத்துச்செடி நாற்றுகள், 3 முதல் நான்கு மாதங்களில் நிழல் தரக்கூடிய வீட்டுத் தோட்டங்களில் நடவு செய்யப்படுகிறது. நன்கு பராமரிக்கப்படும் மிளகு குத்துச்செடிகளில் இருந்து, 2 முதல் 3 ஆண்டுகளில் செடி ஒன்றுக்கு 1 முதல் 1.5 கிலோ மிளகு கிடைக்கிறது. மிளகு செடிகள் தேவைப்படுவோர் கொல்லிமலையில் உள்ள செம்மேடு, படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தக்காளி விலை தொடர்ந்து சரிவு: விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,23:38 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் விலை கடும் வீழ்ச்சி அடைந்திருப்பதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு ஆகிய இரு இடங்களில் தக்காளிக்கு பிரதான சந்தையுள்ளது. இந்த சந்தையில் இருந்து சேலம், சென்னை, மதுரை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்து தக்காளி கொள்முதல் செய்வார்கள்.

இதனால், இந்த இரு சந்தையிலும் தக்காளி விவசாயிகள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு செல்வார்கள்.சந்தை விற்பனை வசதியிருப்பதால், மாவட்டத்தில் தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு ஆகிய தாலுகா பகுதியில் விவசாயிகள் பெரும் அளவில் தக்காளி சாகுபடிக்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன் தக்காளி விலை கிலோ 50 முதல் 60 வரையில் விற்பனை செய்யப்பட்டது. சந்தையில் நல்ல விலை கிடைத்ததை தொடர்ந்து விவசாயிகள் பெரும் அளவில் தக்காளி சாகுபடிக்கு மாறினர். தற்போது, வீரிய ரக தக்காளிகள் அதிக அளவில் அறுவடை நடந்து வரும் நிலையில் சந்தையில் எப்போதும் இல்லாத அளவுக்கு விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த 15 நாட்களாக கிலோ 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தி அதிகரிப்பு விலை குறைந்துள்ளது.

கோடை காலம் என்பதால், தக்காளி பயன்பாடு அதிகரித்த போதும், விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இதனால், அறுவடை கூலிக்கு கூட விலை கிடைக்காமல் விவசாயிகள் அறுவடை செய்த பழங்களை உள்ளூர் சந்தைகளிலும், உள்ளூர் வியாபாரிகளுக்கும் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

**தனியார் பால் பண்ணைகளில் லிட்டருக்கு ரூ.2 உயர்வு: டீ விலை உயரும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,01:12 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தனியார் பால் பண்ணைகளில் திடீரென பால் லிட்டருக்கு 2 ரூபாய் நேற்று முதல் உயர்ந்துள்ளது.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் சார்பு தொழிலாக கால்நடை வளர்த்து வருகின்றார். மாவட்டத்தில் தினம் 10 லட்சம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. உள்ளூர் தேவைக்கு போக பால் வெளி மாவட்டங்களில் உள்ள தனியார் பால் பண்ணைகளுக்கு கொள்முதல் செய்யப்பட்டு விற்பனைக்கு செல்கிறது. இங்கிருந்து கேரளா மாநிலத்துக்கும் தினம் 3 லட்சம் லிட்டர் வரையில் பால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனைக்கு செல்கிறது. கடந்த இரு மாதத்துக்கு முன் பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை தொடர்ந்து தனியார் பால் பண்ணைகளில் பசும்பால் 18 ரூபாயில் இருந்து 20 ரூபாயாகவும், 20 ரூபாயில் இருந்த எருமை பால் லிட்டருக்கு 22 ரூபாயும் உயர்த்தப்பட்டது.
தற்போது, மீண்டும் லிட்டருக்கு பசும் பால், எருமைப்பால் 2 ரூபாய் உயர்ந்துள்ளது. இரண்டே மாதத்தில் லிட்டருக்கு நான்கு ரூபாய் வரையில் விலை உயர்ந்திருப்பதால், பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தற்போது கோடை வெயில் நேரம் என்பதால், பால், தயிர் உபயோகம் அதிகரித்துள்ள நிலையில் விலை ஏற்றம் நடுத்தர மக்களை பெரிதும் பாதிப்படைய செய்துள்ளது. திடீர் விலை ஏற்றத்தால் டீ மற்றும் காபி விலையை உயர்த்த டீக்கடையினர் முடிவு செய்துள்ளனர். தற்போது டீ 5 ரூபாய்க்கும், காபி 6 ரூபாய்க்கும், உயர் ரக சைவ ஹோட்டல்களில் டீ 8 ரூபாயும், காபி 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் பால் விலை ஏற்றத்தால் மீண்டும் டீ, காபி விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**வனவிலங்குகள் இடம் பெயர்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2011,01:12 IST

தர்மபுரி: கோடை சீசன் ஆரம்பித்துவிட்டதால், தீவன தட்டுப்பாடு மற்றும் தண்ணீர் தேவைக்காக வனவிலங்குகள் தங்கள் வாழ்வாதர பகுதியை விட்டு வேறு இடங்களிலுக்கு இடம் பெயர்வதை கட்டுப்படுத்த வனத்துறையினர் தீவிர முயற்சிகள் எடுத்துள்ளனர். கோடை சீசன் துவங்கிவிட்டதால், தர்மபுரி மாவட்ட வனப்பகுதியில் வசிக்கும் விலங்குகள் உணவு மற்றும் தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க அருகில் உள்ள வனப்பகுதி மற்றும் கிராமங்களுக்குள் புகுந்துவிடுவது வாடிக்கையாகவுள்ளது. மேலும், வனவிலங்குகள் உணவு தேவைக்காக இடம்

பெயர்வதை கட்டுப்படுத்தி அவற்றுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீர் குளங்கள் வெட்ட மாவட்ட வனத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழகத்தில் 22,877 சதுர கிலோமீட்டர் வனப்பரப்பு உள்ளது. இதில் 39.4 சதவீதம் வனப் பரப்பு கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், 36.5 சதவீதம் வனப்பரப்பு தர்மபுரி மாவட்டத்திலும் உள்ளது. அதேபோல, இவ்விரு மாவட்டத்திலும் 22 சதவீதம் விவசாயிகள் வனப்பரப்புக்கு அருகில் விவசாயம் செய்துவருகின்றனர். தர்மபுரியில் உற்பத்தி செய்யப்படும் விளை பொருள்களில் 36 சதவீதமும், கிருஷ்ணகிரியில் 49 சதவீதமும் வனப்பரப்பையொட்டியுள்ள விளை நிலங்களில் இருந்து கிடைக்கிறது. இவ்விரு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவிவரும் வறட்சியால், கோடை சீசன் துவங்கும் நேரத்தில் காட்டு பகுதிகளில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்படுகிறது. வனப்பகுதியில் வனவிலங்குகளுக்கு தேவையான உணவு வகை தாவரங்கள் போதிய அளவு வளர்க்க வனத்துறை முனைப்பு காட்டாததால், வன விலங்குகள் கிராம பகுதிகளுக்கு அவ்வப்போது வந்து விளைநிலங்களை நாசம் செய்துவிடுகிறது.

இதை தடுக்கும் வகையில் மாவட்ட வனத்துறை வனப்பகுதிகளில் தண்ணீர் குளங்கள் வெட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. பென்னாகரம், பாலக்கோடு, அரூர் யூனியன் பகுதிகளை சார்ந்த வனப்பகுதியில் வனவிலங்குகள் வழக்கமாக தண்ணீர் தேடிவரும் பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் வாகனங்களில் மூலம் தண்ணீர் எடுத்துவந்து குளங்களில் நிரப்ப வனத்துறை திட்டமிட்டுள்ளது.

கர்நாடகா மாநில வனப் பகுதியிலிருந்து இனப் பெருக்கத்துக்காக தமிழக எல்லைப் பகுதிகளான ஒகேனக்கல் பகுதிக்கு இனப்பெருக்கத்துக்காக வரும் யாØனைகளுக்கு தேவையான தண்ணீர் மற்றும் உணவு தேடி கிராமம் மற்றும் விவசாய நிலத்துக்குள் புகுந்து விடுவதை தடுக்கும் வகையிலும், அவற்றின் இனப்பெருக்க காலத்தின் போது தேவையான அத்யாவசிய உணவு செடிகள், தண்ணீர் குளங்கள் வெட்டவுள்ளதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். வனவிலங்குகள் தண்ணீர் மற்றும் உணவுத் தேடி இடம் பெயர்வதை தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கையும் எடுத்துள்ள வனத்துறையினர். வனவிலங்குகளின் நடமாட்டத்தை கண்காணிக்க வனப்பகுதியில் இரவு நேர குழு அமைத்து ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## அக்டோபர் – மார்ச் மாத காலத்தில் நெல் கொள்முதல் 2.48 கோடி டன்



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்திய உணவு கழகம், நடப்பு 2010–11 சந்தைப்படுத்துதல் பருவத்தில் இதுவரை 2.48 கோடி டன் நெல் கொள்முதல் செய்துள்ளது. இது கடந்த 2009–10 பருவத்தின் இதே காலத்தை காட்டிலும் ஒரு சதவீதம் (2.50 கோடி டன்) குறைவாகும். நெல் சந்தைப்படுத்துதல் பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான ஓர் ஆண்டு காலமாகும். முந்தைய முழு பருவத்தில் மொத்தம் 3.20 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.*

*நெல் உற்பத்தி*

*நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) நாட்டின் நெல் உற்பத்தி 9.40 கோடி டன்னாக இருக்கும் என மத்திய விவசாய அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளது. இது கடந்த பருவத்தில் 8.90 கோடி டன்னாக இருந்தது. ஆக நடப்பு பருவத்தில் நெல் உற்பத்தி 50 லட்சம் டன் அதிகரிக்கும் நிலை உள்ளது. கோதுமை உற்பத்தி 8.15 கோடி டன்னா இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

*கடந்த 2008–09–ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்), நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி அதுவரை கண்டிராத வகையில் 23.45 கோடி டன்னாக உயர்ந்து இருந்தது. இந்நிலையில், நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி காரணமாக, சென்ற 2009–10–ஆம் வேளாண் பருவத்தில் இது 21.82 கோடி டன்னாக சரிவடைந்தது.*

*நடப்பு பருவத்தில்...*

*நடப்பு பருவத்தில் உணவு தானியங்கள் விளைச்சல் ஒட்டுமொத்த அளவில் 23.21 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தி இந்த அளவு அதிகரிக்க உள்ளது இது இரண்டாவது முறையாகும். வரும் 2011–12 பருவத்தில் இந்த சாதனை அளவையும் விஞ்சி இந்த உற்பத்தி 23.69 கோடி டன்னாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.*

தினகரன்

**கடலை எண்ணெய் ரூ20 உயர்வு**

பதிவு செய்த நாள் 4/3/2011 4:26:37 AM



விருதுநகர்: கடலை பருப்பு விலை உயர்வு மற்றும் பங்குனி திருவிழாக்களால் தேவை அதிகரித்து வருவதை ஒட்டி, கடலை எண்ணெய் விலை டின்னுக்கு ரூ20 உயர்ந்துள்ளது.
கடலைப்பருப்பு 80 கிலோ மூட்டை, ரூ3,500ல் இருந்து ரூ3,600 ஆக உயர்ந்துள்ளது.
பங்குனி திருவிழாக்கள் நடைபெறுவதால், கடலை எண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ1,140ல் இருந்து ரூ1,160 ஆக உயர்ந்துள்ளது. வியா பார போட்டியினால் பாமாயில் விலை குறைந்து வருகிறது என வணிகர்கள் தெரிவித்தனர்.

**முட்டை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் 4/5/2011 2:46:42 AM



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசு உயர்த்தப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், முட்டை விலையில் 5 காசுகள் உயர்த்தப்பட்டு 230 காசுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் முட்டை விலையில் 10 காசுகள் உயர்த்தப்பட்டது.

ஒரு கிலோ முட்டை கோழி விலை ரூ.40 ஆகவும், கறி கோழி விலை ஸி 73 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம் (பைசாவில்) வருமாறு: சென்னை 228, பெங்களூர் 215, மைசூர் 213, ஐதராபாத் 196, மும்பை 221, விஜயவாடா 197, கொல்கத்தா 235, பர்வாலா 182, டெல்லி 190.

# உலக மசாலா அமைப்பு இந்தியாவில் அமைகிறது

பதிவு செய்த நாள் 4/5/2011 2:46:29 AM



புதுடெல்லி : மசாலா பொருட்கள் வர்த்தகத்தை பெருக்க பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்த உலக மசாலா பொருட்களுக்கான அமைப்பு (டபிள்யூ.எஸ்.ஓ.) விரைவில் இந்தியாவில் தொடங்கப்பட உள்ளது. இது குறித்து இந்த அமைப்பின் தலைவர் பிலிப் குருவில்லா கூறியதாவது: மிளகு, ஏலக்காய், கிராம்பு, மஞ்சள், சீரகம், மிளகாய் உட்பட மாசாலா பொருட்கள் உலக அளவில் நம்நாட்டில்தான் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் ஏற்றுமதி மற்றும் பயன்பாட்டிலும் நம்நாடே முதலிடம் வகிக்கிறது.

இதை கருத்தில் கொண்டு மசாலா வர்த்தகத்தை பெருக்கி, விவசாயிகள், நுகர்வோர் பயன்பெறும் வகையில் கேரள மாநிலம் கொச்சியில் உலக மசாலா பொருட்களுக்கான அமைப்பின் தலைமையிடம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இன்னும் 3 மாதங்களுக்குள் அதிகாரபூர்வமாக இந்த அமைப்பு கொச்சியில் தொடங்கப்படும்.

மசாலா பொருட்களுக்கான தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வரும் வேளையில் உற்பத்தியை மட்டும் ஊக்கப்படுத்தாமல், அனைத்து தரப்பும் திருப்தியடையும் வகையில் இந்த அமைப்பு செயல்படும். இதற்கு பல மசாலா நிறுவனங்கள் ஆதரவு தெரிவித்ததுடன் வரவேற்கவும் செய்துள்ளன. மசாலா பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தி வர்த்தகத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்படும் என்று பிலிப் தெரிவித்தார்.